**டிசம்பர் – 05**

# TNPSC துளிகள்

- மெரியம்-வெப்ஸ்டர் அகராதியால் 2020 ஆம் ஆண்டின் சிறந்த வார்த்தையாக 'பாண்டமிக்' (Pandemic – நோய்த் தொற்று) என்ற சொல் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- "உலகின் மிகத் தனிமையான யானை" காவன் (36) பாகிஸ்தானில் உள்ள இஸ்லாமாபாத் மிருகக் காட்சி சாலையில் இருந்து கம்போடிய நாட்டுச் சரணாலயத்தில் ஓய்வு பெறுவதற்காக வேண்டி தனது பயணத்தைத் தொடங்கி உள்ளது.
  - காவன் ஆனது பாகிஸ்தானில் உள்ள ஒரே ஒரு ஆசிய யானையாகும்.
- ஒருண்டோய் என்ற ஒரு திட்டமானது அசாம் அரசால் தொடங்கப்பட உள்ளது.
  - இந்தத் திட்டத்தின் மூலம், பெண்கள் மேம்பாட்டிற்காக ஒவ்வொரு மாதமும் குறைந்த பட்சம் ரூ.830 என்ற தொகையை நேரடியாக அவர்களது வங்கிக் கணக்குகளுக்கு மாற்ற அந்த மாநில அரசாங்கம் முயல்கிறது.
- பிரிட்டிஷ் அகாடமி ஆஃப் ஃபிலிம் அண்ட் டெலிவிஷன் ஆர்ட்ஸின் (BAFTA) திருப்புமுனை என்ற முன்னெடுப்பின் (Breakthrough Initiative) தூதராக ஏ.ஆர்.ரஹ்மான் அறிவிக்கப் பட்டு உள்ளார்.
  - நெட்ஃபிலிக்ஸ் ஆதரிக்கும் இந்த முயற்சியானது, இந்தியாவில் திரைப்படம், விளையாட்டுகள் அல்லது தொலைக்காட்சியில் நிலவி வரும் ஐந்து திறமைகளை அடையாளம் காண்பது, கொண்டாடுவது மற்றும் அவற்றை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆசிய அபிவிருத்தி வங்கியானது 'ஆசியா மற்றும் பசிபிக் பிராந்திய ஒத்துழைப்பின் எதிர்காலம்' என்ற ஒரு புதிய புத்தகத்தை வெளியிட்டுள்ளது.
- இந்தியாவின் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையமானது ஐசிஐசிஐ லோம்பார்டு பொதுக் காப்பீட்டு நிறுவனத்தினால் மேற்கொள்ளப் படும் பாரதி ஏஎக்ஸ்ஏ பொதுக் காப்பீட்டு நிறுவனத்தின் கையகப்படுத்தலுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- நைஜீரியாவின் வடகிழக்குப் பகுதியில் 110 வேளாண் தொழலாளர்கள் கொல்லப் பட்டதற்காக போகோ ஹராம் ஜிகாதிஸ்ட் தீவிரவாதிகள் மீது குற்றம் சுமத்தப் பட்டு உள்ளது.

# தேசியச் செய்திகள்

## தேசியக் கடல்சார் கள விழிப்புணர்வு மையம்

- இந்தியக் கடற்படையின் தகவல் மேலாண்மை மற்றும் பகுப்பாய்வு மையமானது ஒரு தேசியக் கடல்சார் கள விழிப்புணர்வு மையமாக மாறுகிறது.
- இது 26/11 மும்பை பயங்கரவாத தாக்குதல்களுக்குப் பின்னர் அமைக்கப்பட்ட கடல் தரவு இணைவிற்கான ஒரு முதன்மை நிறுவனமாகும்.
- குருகிராமில் அமைந்துள்ள தகவல் மேலாண்மை மற்றும் பகுப்பாய்வு மையமானது நீண்ட ஆழமானக் கடல்களில் செல்லும் கப்பல்களைக் கண்காணிக்கிறது.
- இது தேசியக் கட்டளை கட்டுப்பாட்டுத் தொடர்பு மற்றும் புலனாய்வு அமைப்பின் ஒரு முதன்மை மையமாகும்.

# சர்வதேசச் செய்திகள்

## ஐ.நா. துப்புரவு மற்றும் சுகாதார நிதி

- ஐக்கிய நாடுகள் சபையானது துப்புரவு மற்றும் சுகாதார நிதியை அறிமுகப் படுத்தி உள்ளது.
- துப்புரவுச் சேவைகள் பற்றாக்குறையால் உருவாகும் நோய்களின் அதிக சுமையைக் கொண்ட நாடுகளுக்கு விரைவாக நிதி வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்த நிதியை ஐ.நா. திட்டங்கள் சேவைகளுக்கான அலுவலகம் வழங்குகிறது.
- இது ஐ.நா மற்றும் அதன் கூட்டாளர்களுக்குத் தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் திட்டங்கள் செயல்படுத்துதலை வழங்குகிறது.

## UNCTAD அறிக்கை

- 'வர்த்தகம் மற்றும் மேம்பாட்டில் கோவிட்-19 தொற்றுநோயின் தாக்கம்: புதிய இயல்பிற்கு மாறுதல்' என்ற தலைப்பில் இந்த அறிக்கை வெளியிடப் பட்டுள்ளது.
- இது ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தகம் மற்றும் மேம்பாடு குறித்த மாநாட்டின் (United Nations Conference on Trade and Development - UNCTAD) ஒரு புதிய அறிக்கையாகும்.
- ஒரு தகுதியான கோவிட்-19 தடுப்பூசியானது தொற்றுநோயினால் உருவாக்கப் பட்ட பொருளாதார சேதத்தின் பரவலைத் தடுக்காது என்று அது எச்சரித்துள்ளது.
- இந்த அறிக்கையின் படி உடனடிக் கொள்கை நடவடிக்கைகள் எடுக்கப்படா விட்டால் ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் அதன் பாதையை விட்டு விலகக் கூடும் என அறிவித்துள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## கர்நாடகாவில் கடல் ஒளிர்வி பூத்தல்

- "கடல் ஒளிர்வி" (sea sparkle) என்று அழைக்கப்படும் நோக்டிலுகா சிண்டிலான்ஸின் (Noctiluca Scintillans) பூக்களானது கர்நாடகக் கடற்கரையில் சுமார் ஒரு மாதமாக காணப் படுகின்றது.
- ஒளி வீசும் பச்சை இருகசை உயிரியான நோக்டிலுகா சிண்டிலன்ஸ் (bioluminescent green dinoflagellate N. Scintillans) என்பதும் இரவில் கடல் நீரைப் பிரகாசமாக்குகிறது.
- என். சிண்டிலன்ஸ் ஒரு தாவரமாகவும் விலங்காகவும் விளங்குகிறது.

## நீல அலை நிகழ்வு

- இது மகாராஷ்டிரக் கடற்கரையின் பல பகுதிகளில் காணப்பட்டுள்ளது.
- இந்த நிகழ்விற்கு உயிரி ஒளிர்வே (பயோலுமினென்சென்ஸ்) காரணமாகும்.
- நுண்ணுயிரிகளிடமிருந்து கடலில் தோன்றும் பிரகாசமான ஒளியானது பயோ-லுமினென்சென்ஸ் அல்லது உயிரி ஒளிர்வு என்று அழைக்கப் படுகிறது.

- இது தாவர மிதவை உயிரி (பைட்டோபிளாங்க்டன்ஸ்) எனப்படும் நுண்ணிய கடல் தாவரங்களால் ஒளியை வெளியேற்றும் ஒரு நிகழ்வாகும்.
- நீல ஒளியானது உயிரினத்தின் உள்ளே உள்ள புரதங்களின் வேதியியல் எதிர்வினைகளிலிருந்து உருவாகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியாவின் தடை செய்யப்பட்ட கெளுத்தி மீன்

- தாய் மங்கூர் என்பது தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தால் தடை செய்யப்பட்ட ஒரு கெளுத்தி மீன் வகையாகும்.
- இது அதன் சுற்றுச்சூழலையும் மற்றும் நுகர்வோரின் ஆரோக்கியத்திற்கும் தீங்கு விளைவிக்கிறது.
- சமீபத்தில் இது மகாராஷ்டிராவின் தானேவில் சட்டவிரோதமாக வளர்க்கப்பட்டது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

## குஜராத்தில் சிறுத்தைகளுக்கான தனியார் பாதுகாப்பு

- குஜராத் வனத்துறையானது 12 சிறுத்தைகளை ஜாம்நகரில் உள்ள தனியார் மீட்பு மற்றும் மறுவாழ்வு மையத்திற்கு அனுப்பியுள்ளது.
- இந்த வகையான திட்டமானது மாநிலத்தில் முதன்முறையாகக் கொண்டு வரப்பட்டு உள்ளது.
- அந்தச் சிறுத்தைகள் ஜூனகாட்டில் உள்ள சக்கர் பாக் விலங்கியல் பூங்காவிலிருந்து அனுப்பப் பட்டுள்ளன.

# மாநிலச் செய்திகள்

## துவாரே சர்க்கார்

- இது மேற்கு வங்க அரசினால் தொடங்கப்பட்ட ஒரு திட்டமாகும்.
- இந்தத் திட்டத்தின் கீழ், உள்ளாட்சி அமைப்பு அளவில் முகாம்கள் ஏற்பாடு செய்யப் பட உள்ளன.
- இந்த முகாம்களின் மூலம், மாநில அரசானது மேற்கு வங்க மக்களுக்கு அரசுச் சேவைகளை அவர்கள் வீட்டிலேயே வழங்க வழிவகை செய்கிறது.

# முக்கிய தினங்கள்

## உலகக் கணினி எழுத்தறிவு நாள் - டிசம்பர் 02

- உலகக் கணினி எழுத்தறிவு நாளானது முதன்முதலில் 2001 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டு கொண்டாடப் பட்டது.
- உலகக் கணினி எழுத்தறிவு நாளானது தேசியத் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் இருபதாவது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.

- மக்களுக்கு இன்னும் எட்டாத கணினி மற்றும் தொழில்நுட்பம் போன்றவற்றைப் பற்றிய போதுமான விழிப்புணர்வை அளிக்கும் வகையில் இந்நாள் அனுசரிக்கப் படுகிறது.

## தேசிய மாசுக் கட்டுப்பாட்டு நாள் - டிசம்பர் 02

- இது அதிகரித்து வரும் மாசு அளவு மற்றும் மனிதர்கள் மற்றும் நமது சுற்றுச்சூழல் அமைப்பு மீதான அதன் அபாயகரமான விளைவு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த டிசம்பர் 2 ஆம் தேதி அனுசரிக்கப் படுகிறது.
- இது போபால் நச்சுவாயுப் பேரழிவு சம்பவத்திற்குப் பிறகு அனுசரிக்க தொடங்கப் பட்டது.
- இது 1984 ஆம் ஆண்டு டிசம்பர் 2 ஆம் தேதி இரவு நடந்தது.
- 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 2 ஆம் தேதி போபால் நச்சுவாயுப் பேரழிவின் 36வது ஆண்டு நிறைவைக் குறிக்கும்.

## அடிமைத் தனத்தை ஒழிப்பதற்கான சர்வதேச நாள் - டிசம்பர் 02

- இந்த நாள் மக்களைக் கடத்துதல், பாலியல் ரீதியான சுரண்டல், குழந்தைத் தொழிலாளர்கள், கட்டாயத் திருமணம், மற்றும் ஆயுதப் போட்டியில் குழந்தைகளை ஈடுபடுத்துதல் போன்ற அடிமைத்தனத்தின் தற்போதைய வடிவங்களை அகற்றுவதில் கவனம் செலுத்துகிறது.
- ஐ.நா.வின் கூற்றுப் படி, 40.3 மில்லியன் மக்கள் நவீன அடிமைத்தனத்தில் உள்ளனர், இதில் 24.9 மில்லியன் கட்டாயப் படுத்தப்பட்ட வேலை மற்றும் 15.4 மில்லியன் கட்டாயத் திருமணம் ஆகியன அடங்கும்.
- மக்கள் கடத்தப்பட்டு பாலியல் ரீதியாகச் சுரண்டப் படுவதை எதிர்க்கும் ஒரு ஒப்பந்தமானது 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 2 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் நிறைவேற்றப் பட்டது.




## மாற்றுத் திறனாளிகளுக்கான சர்வதேச நாள் - டிசம்பர் 03

- சமூகம் மற்றும் வளர்ச்சியின் அனைத்துத் துறைகளிலும் மாற்றுத் திறனாளிகளின்

உரிமைகள் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.

- இந்த ஆண்டிற்கான கருத்துரு "சிறந்ததை மீண்டும் கட்டியெழுப்புதல்: இயலாமையை உள்ளடக்கிய, அனைவராலும் அணுகக் கூடிய மற்றும் கோவிட்-19 தொற்றுக்குப் பிந்தைய ஒரு நிலையான உலகத்தை நோக்கி" (Building Back Better: toward a disability-inclusive, accessible and sustainable post COVID-19 World) என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★